# அலகுத்தேர்வு : இயல் - 1

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $3 \times 1 = 3$

1. ‘பொய்யகற்றும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.

   அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்

   இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

2. ‘தொன்மை’ என்னும் சொல்லின் பொருள் ____________.

   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

3. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ____________ ஆக இருக்கும்.

   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** $3 \times 1 = 3$

4. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் __________ சுருங்கிவிட்டது
5. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ____________ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.
6. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ____________.

**III. பொருத்துக.** $4 \times 1/2 = 2$

| | | |
|---|---|---|
| 7. விளைவுக்கு | - | பால் |
| 8. அறிவுக்கு | - | வேல் |
| 9. இளமைக்கு | - | நீர் |
| 10. புலவர்க்கு | - | தோள் |

**IV. சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.** $2 \times 1/2 = 1$

11. தனிச்சிறப்பு ______________________
12. நாள்தோறும் ______________________

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** $3 \times 2 = 6$

13. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?
14. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
15. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?
16. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

17. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
18. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
19. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

**VII. அடிபிறழாமல் எழுதுக.** $1 \times 4 = 4$

20. **‘தமிழுக்கும்’** எனத் தொடங்கும் பாரதிதாசனின் **இன்பத் தமிழ்** பாடலை எழுதுக.